கொடுக்க வேண்டியிருப்பதால்தான், நம்முடைய துறையிலே போதுமான பண வசதி இருக்கின்ற காரணத்தால் அங்கங்கு கட்டிடங்கள் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Jagannatha Nagar Sundara Vinayagar Koil

* 72 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the "Kreedam" of Sundara Vinayagar Koil at Jagannatha Nagar, Arumbakkam was reported to the police to be lost about December 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ரூ. 30 மதிப்புடைய வெள்ளி முலாம் பூசப்பட்ட கிரீடம் களவாடப்பட்டது. இதுபற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

Kumbakonam Sarangapani temple car

* 73 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether steps have been taken to run the temple car of Sri Sarangapani Devasthanam at Kumbakonam during 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இத்திருக்கோயிலின் தேரினை அரசு தொழில் நுட்ப அலுவலர்கள் பார்வையிட்டு அதனைத் தற்போதைய சூழ்நிலைகளுக்கேற்பப் புதுப்பித்து, மீண்டும் ஓட விடுவதற்குரிய சாத்தியக் கூறுகளையும், வழிமுறைகளையும் ஆராய்ந்து வருகின்றனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்படிப்பட்ட பழம்பெரும் தேர்களை எல்லாம் ஏதோ ஏலம் விடப்போகிறார்கள் என்ற செய்தியைப் பார்த்தோம். இப்படி ஏலம் விட்டால் பழைய கலைப் பொருள்களை நாம் இழந்து விடுவோம். ஆகவே, அப்படிப்

பட்ட கலைவண்ணத் தேர்களை, இலாகாவிலே ஒரு பகுதியிலே பார்வைக்கு வைத்துவிட்டு புதிதாகத் தேர்களைச் செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சிறப்புத் திறமை வாய்ந்த தேர்களை எல்லாம் ஏலம் விடக் கூடாது என்று ஏற்கனவே அரசு தடைப்படுத்தி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்

விவசாயிகளின் போராட்ட செயல் கமிட்டியினர் கோட்டைக்கு முன்னால் ஆகஸ்டு 2-ம் தேதி கைது செய்யப்பட்டிருப்பதும், அவர்களது கோரிக்கை ஏற்கப்படாமல் இருப்பதும் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவசாயிகளிடம் கடன் வசூலிப்பதில் அரசு காட்டும் கெடுபிடிகளைச் சுட்டிக்காட்ட தலைமைச் செயலகத்தை நோக்கி வந்த விவசாயத் தலைவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து விவாதிக்க பேரவையின் 42-வது விதியின் கீழ் திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. கே. என். குமாரசாமி, திரு. என். கே. பழனிசாமி, திரு. எஸ். அழகர்சாமி, திரு. எஸ். வடிவேல், திரு. மணலி சி. கந்தசாமி, திரு. ஏ. கே. சுப்பையா, திரு. பி. வெங்கடசாமி ஆகிய 11 உறுப்பினர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டிலும் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.